


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 10.11.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்











# தமிழக நிகழ்வுகள்

- **சேலம் மாவட்டம்,** காடையாம்பட்டி, பண்ணப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில், நாட்டு நலப்பணி திட்டத்தில் பங்கேற்றுள்ள மாணவர்கள், சுற்றுச்சூழலை பாதுகாக்க, மரங்களை வளர்க்க, வேம்பு, புங்கன் என **ஒரு லட்சம் விதை பந்துகளை உருவாக்கினர்.** டேனிஷ்பேட்டை வனச்சரகர் பரசுராம மூர்த்தி தலைமையில், விதைப்பந்து வீசும் பணியை, நேற்று முன்தினம், மாணவர்கள் துவங்கினர்.
  - தின்னப்பட்டி, காஞ்சேரி, புனக்காடு, டேனிஷ்பேட்டை, உள்கோம்பை ஆகிய வனப்பகுதியில், மாணவர்கள், ஆசிரியர்கள், வனக்குழுவினர், வனத்துறை அதிகாரிகள் என 50க்கும் மேற்பட்டோர், முதல் நாளில் 70 ஆயிரம் விதைப்பந்துகளை வீசினர்.

- **தமிழ்நாட்டில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம்** நடைமுறையில் உள்ளது. இந்நிலையில், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தோல்வி அடைந்த மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - **Related News :**
    - தமிழ்நாட்டில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச

மடிக்கணினி வழங்கும் திட்டம் 2012ஆம் ஆண்டு தொடங்கியது.

- அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் இந்த திட்டமும் வருகிறது.

## தேசிய நிகழ்வுகள்

- இந்தியா, பாகிஸ்தான் இடையிலான கர்தார்பூர் வழித்தடத்தை பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை திறந்து வைத்தார். அத்துடன், முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர் ஹர்சிம்ரத் கௌர், பஞ்சாப் முதல்வர் அமரீந்தர் சிங் உள்பட சுமார் 500 பேர் கொண்ட முதல் யாத்ரீகர்கள் குழுவை கர்தார்பூருக்கு பிரதமர் மோடி வழியனுப்பிவைத்தார்.
    - **குருநானக்கின் 550 – ஆவது பிறந்த தினம்** வரும் 12-ஆம் தேதி கொண்டாடப்படவிருக்கும் நிலையில் **கர்தார்பூர் வழித்தடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.**
    - **Related News :**
        - 1522 : முதல் சீக்கிய குருவான குருநானக் கர்தார்பூரில் குருத்வாராவை நிறுவினார்.
        - 2018, நவம்பர் 22: கர்தார்பூர் வழித்தடத் திட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல்

## சர்வதேச நிகழ்வுகள்

- **அமெரிக்காவில் வெளிநாட்டவர் தற்காலிகமாகத் தங்கிப் பணிபுரிவதற்கான ஹெச்1பி நுழைவு இசைவுக்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.700** வரை உயர்த்தப்பட்டுள்ளது. ஹெச்1பி நுழைவு இசைவு வழங்கும் நடைமுறைகள் அனைத்தையும் இணையவழியில் கையாள அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.
    - 2021 ஆம் ஆண்டில் புதிய நடைமுறையை செயல்பாட்டுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **தோஹாவில் நடைபெற்று வரும் 14ஆவது ஆசிய சாம்பியன் போட்டியில்** சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 435.8 புள்ளிகளை குவித்து **நான்காவது இடத்தைப்** பெற்றார். இந்தியாவை சேர்ந்த தேஜஸ்வினி இதன் மூலம் துப்பாக்கி சுடுதலில் 12ஆவது ஒலிம்பிக் தகுதி இடத்தைப் பெற்றார் அவர்.
    - 39 வயதான தேஜஸ்வினி கடந்த 2008, 2012, 2016 ஒலிம்பிக்குக்கு தகுதி பெறவில்லை. இது அவரது முதல் ஒலிம்பிக் போட்டியாகும்.
    - **Related Keys :**
        - 2010 - இல் முனிக் உலகக் கோப்பையில் 50 மீ ரை.ஃ.பிள் புரோன் பிரிவில் தங்கப்பதக்கத்துடன் முதல் சாம்பியன் பட்டம் வென்றார்.

# திருக்குறள்

**குறள் எண் : 13**

அதிகாரம் : வான்சிறப்பு

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**

**உள்நின்று உடற்றும் பசி.**

**விளக்கம் :** உரிய காலத்தே மழை பொய்யாது பொய்க்குமானால், கடல் சூழ்ந்த இப்பேருலகத்தில் வாழும் உயிர்களைப் பசி வருத்தும்

We Shine Academy TM